**19.06.2026** **STC No. 306/2018** **PW1. வறீதையா**

கடந்த 10.02.2026–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு **அதன்** அடிப்படையில் மேற்படி சாட்சி இன்று குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.06.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர் இல்லை. மேற்படி ஆஜர் இன்மை நீதி நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317 (1) –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி தயார் செய்தது என்றால், சரிதான். இந்நீதிமன்றத்தில் நான் எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், 5 அல்லது 6 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனக்கு எவ்வாறு பழக்கம் ஆனார்கள் என்றால், நான் நடத்தி வரும் பைனான்ஸ் நிறுவனத்தில் நகை அடகு வைக்க வருவார்கள். அதனடிப்படையில் எனக்கு பழக்கம் ஆனார்கள். எனது பைனான்ஸ் நிறுவனத்தில் இரண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் வருவார்கள் என்றால், சரிதான்.

3. என்னிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நகை அடகு வைத்ததை காட்டுவதற்கு அந்த நகை இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது பைனான்ஸ் நிறுவனத்தின் பெயர் என்ன என்றால், சைனி பைனான்ஸ் நிறுவனம் ஆகும். அது 1998–ல் பதிவு செய்யப்பட்டது.

4. மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தின் உரிமத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால், தாக்கல் செய்யலாம். என்னிடம் Money Lending License உள்ளதா என்றால், உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால், தாக்கல் செய்யலாம்.

5. எனது நிறுவனத்தை GST–யில் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். நான் எனது நிறுவனத்திலிருந்து நிறைய நபர்களுக்க வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேனா

என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னிடம் எந்த தேதியில் எங்கு வைத்து பணத்தை கேட்டார்கள் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனது வீட்டிற்கு வந்து நான் கடன் கொடுத்த தேதிக்கு 40 நாட்களுக்கு முன்னர் கேட்டார்கள்.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கடன் கேட்கும் பொழுது எனது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால், எனது மனைவி இருந்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால், மாலை நேரம் வந்தார்கள். நேரம் சரியாக ஞாபகம் இல்லை.

7. எனக்கு வங்கிக் கணக்குகள் உள்ளது என்றால், உள்ளது. நான் GST கட்டுகிறேன் என்றால், நான் முதலில் செலுத்தினேன். தற்சமயம் செலுத்தவில்லை. Income Tax செலுத்தி வருகிறேனா என்றால், செலுத்துகிறேன். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எந்த தேதியில் எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால், எனது வீட்டில் வைத்து 16.07.2018–ம் தேதியன்று கொடுத்தேன்.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பணத்தை கடன் கொடுக்கும் பொழுது யார் இருந்தார்கள் என்றால், எங்கள் மூவரை தவிர யாரும் உடன் இல்லை. நான் எந்த குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பணம் கொடுத்தேன் என்றால், 1–ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பணம் கொடுத்தேன்.

9. நான் பணத்தை காசோலை மூலமாக கொடுத்தேனா என்றால், நான் கையில் ரொக்கமாக 500 ரூபாய் கட்டுகளாக 4 கட்டுகள் வீதம் 2 லட்சம் ரூபாய் கொடுத்தேன். மேற்படி பணத்தை வங்கியிருந்து எடுத்துக் கொடுத்தேன் என்றால், 1.5 லட்சம் ரூபாய் இந்தியன் வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தேன். 50 ஆயிரம் ரூபாய் கையில் வைத்திருந்ததை கொடுத்தேன்.

10. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணத்தைக் கொடுத்ததை அந்த ஆண்டு வருமானவரி கணக்கில் காண்பித்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால், சரிதான். நான் எந்த தேதியில் காசோலையை பணத்திற்காக வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால், 19.09.2018 அன்று வங்கியில் தாக்கல் செய்தேன்.

11. காசோலை எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால், 09.10.2018 அன்று காசோலை திருப்பப்பட்டது. நான் எந்த தேதியில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு வழக்கறிவிப்பு அனுப்பினேன் என்றால், 23.10.2018 அன்று அனுப்பினேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்றைய தேதி வழக்கறிவிப்பை பெற்றுக் கொண்டார்கள் என்றால், மறுநாள் 24.10.2018 அன்று பெற்றுக் கொண்டார்கள்.

12. வழக்கறிவிப்பு அனுப்பிய 15 நாட்களுக்குள் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கு காசோலையானது யாருடைய காசோலை என்றால், இரண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் Joint Account காசோலை ஆகும். காசோலையில் யார் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், ஜாகீர் மீரா பெயர் குறிப்பிடப்பட்டிருந்து.

13. நான் ஜாகீர் மீராவின் அடகு வைத்த நகைகளை ஏலம் விட்டேன் என்றால், முறைப்படி அறிவிப்பு வழங்கி சட்டப்படி ஏலம் விட்டேன். அதற்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். எவ்வளவு தொகைக்கு ஏலம் விட்டேன் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. ஆவணத்தில் உள்ளது.

14. நான் ஏலம் விட்ட நகைகளின் பணத்தை எந்த கடனுக்கு ஈடு செய்தேன் என்றால், நகை அடகு வைத்து மீட்டெடுக்காத கடனுக்கு ஈடு செய்தேன். எனது பைனான்ஸ் நிறுவனத்தில் நகை அடகு வைக்கும் நபர்களிடம் காசோலை வாங்குவது வழக்கம் என்றால், இல்லை.

15. காசோலை நான் பூர்த்தி செய்தேனா என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் பூர்த்தி செய்தார்கள். 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வழக்கறிவிப்பை பெற்றுக் கொள்ளவில்லை என்றால், சரிதான். அவருக்கு தவறான முகவரியில் அனுப்பிதால் தான் வழக்கறிவிப்பு பெற்றுக் கொள்ளவில்லை என்றால், சரியல்ல. இரு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் கணவன் மனைவி ஆவார்கள். ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறார்கள்.

16. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நகை அடகு வைக்கும் பொழுது பிணையாக கொடுத்த காசோலையை வைத்து நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நகை

அடகு வைத்த அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்திய நிலைமையிலும் நான் அவர்களின் நகைகளை ஏலம் விட்டு விட்டு இவ்வழக்கை அவர்கள் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

**ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.